கான குறிப்பு பரிசிலனையில் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் அந்த ஒன்றியத்திற்குத் தெரிவிக்கப்பட்டு தேவையான மேம்பாடு நடவடிக்கைகள் எடுக்க உத்தரவு இடப்படும்.

திரு. என். கிட்டப்பா : இந்தச் சாலையை அமைப்பதற்காக அங்கு கப்பி கொட்டப்பட்டு ஏறத்தாழ இரண்டாண்டுக் காலமாக அது சேதமாகிக் கொண்டிருக்கிறது. எனவே அதை நினைவுபடுத்தி அரசு துரிதமாக அந்தச் சாலையை அமைப்பதற்கு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பஞ்சாயத்து யூனியன் சாலை. அவர்கள்தான் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் யூனியனுக்கு தக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

குட்டை அமைப்புத் திட்டங்கள்.

***150 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் S.F. No. 151 செட்டிபாளையம் கிராமத்தில் குட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) பல்லடம் தாலுக்கா செட்டிபாளையம் கிராமத்தில் சர்வே நெ. 151-ல் ரூ. 51,900 செலவில் ஒரு குட்டை கட்டும் திட்டம் செயற்பொறியாளர், பொள்ளாச்சி அவர்களிடம் பரிசிலனையில் உள்ளது.

***151 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிபாளையம் கிராமம், சின்னாண்டிபாளையத்திற்கு அருகில் உள்ள குட்டையின் கரையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இத் திட்டத்திற்கான ஆய்வு தல அதிகாரிகளின் பரிசிலனையில் உள்ளது.